ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2445 - 2025 ජූලි මස 11 වැනි සිකුරාදා - 2025.07.11

2445ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி II - சட்டம் சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்ற விசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | 62 |
| மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக்கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025, ஓகத்து மாதம் 01ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, யூலை மாதம் 18ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ்.டீ.பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர். ( பதில்)

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

61- B 82699 - 403 (2025/07)

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

## மாவட்ட நீதிமன்றம் - சிலாபம்

பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பி.எல்.சி.,
இல. 450, காலி வீதி, கொழும்பு 03.

வழக்கு இல. MB 6215
தன்மை : ஈடு
பெறுமதி : ரூபா 1,715,193.32
செயல்முறை : முறையானது
தடை உத்தரவு இல. : 08/ 24

*வழக்காளி*

எதிராக

1. ரஜதேவ மொஹொட்டி அப்புஹாமிலாகே அசேல கயான் மனுரங்க

2. ஹேரத் ஹிட்டிஹாமிலாகே புஷ்பலதா.

இருவரும்

இல. 143, கிரிவெல்கெலே, நல்லதரன்கட்டுவ.

*- எதிராளிகள்-*

2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி சிலாபம் மாவட்ட நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் வழக்காளிக்கு மேற்குறிப்பிடப்பட்ட 1 ஆம் மற்றும் 2 ஆம் எதிராளிகளிடமிருந்து 2018.05.08 ஆந் திகதிக்கு அறவிடப்பட வேண்டிய ஒரு மில்லியன் ஏழு இலட்சத்து பதினையாயிரத்து நூற்று தொண்ணூற்று மூன்று ரூபா முப்பத்திரண்டு சதம் (ரூபா 1,715,193.32) பணத்தொகையும் மற்றும் 2018 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆந் திகதியிலிருந்து ரூபா 1,650,017.58 பணத்தொகைக்கு 18% வருடாந்த வட்டியையும் வழக்காளிக்கு செலுத்த வேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் , மேற்குறிப்பிட்ட வழக்காளிக்கு 1 ஆம் மற்றும் 2 ஆம் எதிராளிகளிடமிருந்து ஒரு மில்லியன் ஏழு இலட்சத்து பதினையாயிரத்து நூற்று தொண்ணூற்று மூன்று ரூபா முப்பத்திரண்டு சதம் (ரூபா 1,715,193.32) பணத்தொகையும் மற்றும் 2018 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆந் திகதியிலிருந்து ரூபா 1,650,017.58 பணத்தொகைக்கு 18% வருடாந்த வட்டியையும் அறவிடுவதற்கு, என்னால் தடை செய்யப்பட்ட பிரசித்த நொத்தாரிசு C . சிறிமெவன் விஜேசேகர அவர்களினால் 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 11706 ஆம் இலக்க ஈட்டு முறியின் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தினை,

2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 05 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு என்னால் தடைசெய்யப்பட்ட இல. 592 C- இலக்கட்டுவ கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட, கிரிவெல்கெலே கிராமத்தில் அமைந்துள்ள ''கிரிவெல்கெலே வத்த'' எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் M.K.மஞ்சு ஸ்ரீ பிரியங்கர அவர்களினால் தயாரிக்கப்பட்ட 2010.10.05 ஆந் திகதிய 1059 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு இல. 01 என அடையாளமிடப்பட்டுள்ள அசையாச் சொத்தானது என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**ஆதனத்தை வந்தடைதல்**: சிலாபம் சந்தியிலிருந்து புத்தளம் பாதையில் சுமார் 14 கிலோமீற்றர் வரை வந்து, நல்லதரன்கட்டுவ சந்தி வரை (88 கிலோமீற்றர் மைல்கல்லை கடந்து 300 மீற்றர்) அத்தன்கனே பாதைக்கு வலது பக்கம் திரும்பி சுமார் 2 கிலோமீற்றர் வந்ததன் பின்னர், அரச மரம் மற்றும் புத்தர் சிலையை கடந்து செல்லும் போது பாதையின் இடது பக்கத்தில் குறித்த காணியானது அமைந்துள்ளது.

**கொடுப்பனவு முறை**: ஏல விற்பனை முடிவடையும் சந்தர்ப்பத்தில் கொள்வனவாளரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.

அ. கொள்முதல் விலையில் நூற்றுக்கு 25%:
ஆ. சிவில் நடைமுறைச் சட்டத்தின் 258 ஆம் இலக்க பிரிவின் பிரகாரம் பதில் பிஸ்கல் கட்டணம்:
இ. விற்பனை தொடர்பான அனைத்து செலவுகளும் பணமாக செலுத்தப்படுதல் வேண்டும். கொள்வனவு விலையின் மீதி 75% பணத்தொகை விற்பனை திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் குறித்த வழக்கின் ஆதாரமாக நீதிமன்றத்தில் செலுத்தப்படுதல் வேண்டும்.

### மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணை

வடமேல் மாகாணம்,புத்தளம் மாவட்டம், சிலாபம் காணிப் பதிவுப் பிரிவுக்குள் பிட்டிகல் வடக்கு கோரளை, ஆனைவிலுந்தான் பற்று, ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபை எல்லைக்குட்பட்ட, ஆராச்சிக்கட்டுவ பிரதேச செயலாளர் பிரிவு, இல. 592 C,

இலக்கட்டுவ கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட, கிரிவெல்கெலே கிராமத்தில் அமைந்துள்ள ''கிரிவெல்கெலே வத்த'' எனும் அரசாங்க காணியானது நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இல. P.P.Pu 158 எனும் வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு இல. 108 இன் எல்லைகளாவன.-

வடக்கு: காணித்துண்டு இல. 101 மற்றும் 102 என பிழையாக குறிப்பிடப்பட்ட, ஆனால் தற்போது மிகச் சரியாக நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட P.P.Pu 158 எனும் வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு இல. 107 என அடையாளமிடப்பட்டுள்ள பாதை.

கிழக்கு: நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட P.P.Pu 158 எனும் வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு இல. 107 என அடையாளமிடப்பட்டுள்ள பாதை.

தெற்கு: உரித்துச் சான்றிதழில் 107 என பிழையாக குறிப்பிடப்பட்டுள்ள , ஆனால் தற்போது நில அளவையாளர் நாயகத்தினால் மிகச் சரியாகத் தயாரிக்கப்பட்டுள்ள P.P.Pu 158 எனும் வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு இல. 150.

மேற்கு: நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட P.P.Pu 158 எனும் வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு இல. 101 மற்றும் 102 மற்றும் இக்காணியானது இரண்டு ஏக்கர், மூன்று றூட், முப்பத்தைந்து பேர்ச் (2ஏ.3றூ.35பே.) விஸ்தீரணத்தை கொண்டுள்ளதுடன் அதனுள்ளடங்கும் சகலவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

இக்காணியானது சிலாபம் காணிப் பதிவகத்தில் தொகுதி/ இருமடி இல. B.R. 22/09 மற்றும் 25/ 03 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மீளளவையின் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட காணியானது பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது**

மேற்குறிப்பிடப்பட்ட கிரிவெல்கெலே கிராமத்தில் அமைந்துள்ள ''கிரிவெல்கெலேவத்த '' எனும் காணியானது உரிமம் பெற்ற நிலஅளவையாளர் M.K.மஞ்சு ஸ்ரீ பிரியங்கர அவர்களினால் தயாரிக்கப்பட்ட 2010.10.05 ஆந் திகதிய வரைபட இல. 1059 இல் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு இல. 01 இன் எல்லைகளாவன.

வடக்கு: நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட P.P.Pu 158 எனும் வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு இல. 107 என அடையாளமிடப்பட்டுள்ள பாதை.

கிழக்கு: நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட P.P.Pu 158 எனும் வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு இல. 107 என அடையாளமிடப்பட்டுள்ள பாதை.

தெற்கு: நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள P.P.Pu 158 எனும் வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு இல. 150 என அடையாளமிடப்பட்டுள்ள பிரதேச சபை பாதை.

மேற்கு: நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட P.P.Pu 158 எனும் வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு இல. 101 மற்றும் 102 மற்றும் இக்காணியானது இரண்டு ஏக்கர், மூன்று றூட், முப்பத்தைந்து பேர்ச் (2ஏ.3றூ.35பே.) விஸ்தீரணத்தை கொண்டுள்ளதுடன் அதனுள்ளடங்கும் சகலவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

பதிவாளர்/ பதில் பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
சிலாபம்.

2025, யூன் 05.

07- 619